JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

Crl.M.P.No.1423/2025 Date: 20.11.2025

| | |
|---|---|
| பெயர் | திருமதி. சாந்தி |
| தந்தை பெயர், க/பெ | சுப்பிரமணி |
| முகவரி | எண்.10, அன்னை நகர் மெயின் ரோடு, அக்கரகாரம் –, கொரட்டூர். |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | இல்லதரசி |
| மதம் | |
| வயது | 59/2025 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 20th day of November 2025.

**சத்திய பிரமாண வாக்குமூலம்:**

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பில் முதலாவது சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னது தான் அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். எனக்கு இரண்டு மகன்கள் உள்ளார். எனது கணவர் ராணுவத்தில் பணி செய்து ஓய்வு பெற்று தனியார் நிறுவனத்தில் வாட்ச்மேன் வேலை செய்கிறார். எனது 2 வது மகன் கார் விபத்தில் இறந்துவிட்டார். எனது 1 ல் மகன் திருமணம் செய்து எங்களுடன் வசித்து வருகிறார். என கணவர் ராணுவத்தில் வேலை செய்த போது குடிபழக்கம் இருந்து வந்துள்ளது. அவருக்கும் எனக்கும் 2017 லிருந்து மனஸ்தாபம் இருந்து வந்தது. என் வீட்டுக்காரர் ராணுவத்தில் இருந்த போது நானும் என் மைத்துனரும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து அந்த வருமானத்தில் கொரட்டுர் பகுதியில் 4 இடத்தை எனது கணவர் பெயரில் சொத்துக்களை வாங்கினோம். பின்னர் எனது கணவரின் குடிபழக்கம் அதிகம் ஆகி அதே பகுதியில் வசிக்கும் முன்னால் Ex.MLA வேதாசலத்துடன் பழக்கம் ஏற்பட்டது. எங்கள் குடும்ப விவரங்களை நன்கு அறிந்து EX–MLA வேதாசலம் எனது கணவருக்கு தினமும் மது வாங்கி கொடுத்து என்து கணவர் பெயரில் உள்ள 8 கோடி மதிப்புள்ள சொத்தை MLA வேதாசலம் பெயரில் மாற்றி கொடுக்கும்படி கணவர் ஏதோ குடிபழக்கத்தில் கூறினார். 2021 ம் வருடம் எனது கணவர் திடீரென்று குடித்துவிட்டு வந்து அசல் சொத்து பத்திரங்களை கேட்டார். அதற்கு ஏன் என்று கேட்ட போது இந்த சொத்துக்களை வேதாசலம் மற்றும் அவரது மகன்கள் (தியாகராஜன், சந்தோஷ்குமார்) பெயரில் மாற்ற போவதாக தெரிவித்தார். அதற்கு நாங்கள் ஒப்பு கொள்ளவில்லை, எங்களை பல வழிகளில் துன்புறுத்தினார்.

ஒரு நாள் வேதாசலம் மற்றும் அவரது 2 மகன்கள் எனது கணவருடன் வீட்டுக்கு வந்து அசல் பத்திரம் தரும் படி மிரட்டினார்கள். அப்போது MLA வேதாசலம் என்பவர் எனது கன்னத்தில் அறைந்து என் புடவையை இழுத்து மானபங்கம் செய்தார்கள். இந்த விசயத்தை வெளியில் கூறினால் உன்னை கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார்கள். மீறி கூறினால் இந்த பகுதியில் வசிக்க முடியாது உன் கணவரை வைத்தே உன்னை கொலை செய்து விடுவேன் என்று கூறியதால் நானும் இதை பற்றி யாரிடமும் சொல்லவில்லை. பின்பும் வேதாசலம் மற்றும் அவரது ஆட்கள் என்று கூறி பல பேர்கள் அசல் பத்திரம் தா என்று எங்களை மிரட்டினார்கள். வேதாசலம் எனது கணவரை காரில் ஏற்றி கொண்டு 17-10-2021 அன்று கொரட்டூர் காவல் நிலையத்தில் அசல் பத்திரம் பெற்று தரும் படி புகார் கொடுத்தார். மறுநாள் விசாரனைக்கு சென்றபோது போலிசார் Bank Locker ல் உள்ள அசல் பத்திரத்தை வேதாசலத்திடம் தரும்படி கூறினார். இல்லையென்றால் கைது செய்து Remand செய்து விடுவோம் என்று கூறியதால் வேறு வழி இல்லாமல் நாங்கள் அவர்கள் சொன்னது போல் எழுதி கொடுத்துவிட்டோம்.

20.10.2021 ம் தேதி வேதாசலம் மற்றும் அவரது 2 மகன்களும், வேலையாட்களும் வந்து எங்களுக்கு சொந்தமான கொரட்டூர் மனையை வேலி போடுவதாக அருகில் இருந்தவர்கள் கூறினார்கள். அதை என் மகன் என்ன என்று பார்க்க சென்றார். அப்போது வேதாசலம், 2 மகன்கள் எனது மகனை மிரட்டி தேவுடியா பையா ஓடிடு இல்லைனா உன்னை இங்கே கொன்று புதைப்பேன் என்று மிரட்டினார்கள். அவசர போலிஸ்க்கு போன் செய்தார். ஆனால் 2 மணி நேரம் யாரும் வரவில்லை . MLA வேதாகசலம் தனது அதிகாரத்தை பயன்படுத்தி எங்கள் குடும்ப பிரச்சனையில் நுழைந்து போலிசாருடன் சேர்ந்து செயல்பட்டார். வேதாசலம் "சுமார் 5 கோடி மதிப்புள்ள சொத்தை பத்திரம் தொலைந்து விட்டது என்று புகார் கொடுத்து "Missing Certificate" பெற்று அந்த சொத்தை எனது பெயருக்கு மாற்றுகிறேன் பார்" மஎன்று சவால் விடுத்தார். எங்களது சொத்துக்களை பெருவதற்காக பல வழிகளில் எங்களுக்கு பிரச்சனைகளை கொடுத்து, போலி ஆவணங்கள் தாயார் செய்து சட்ட விரோதமாக மற்றும் முறைகேடாக வேலைகள் செய்து வருகிறார்.

கடந்த 21.10.2021 அன்று Deputy commisnor அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். புகார் எண்.1191/2021 , கொரட்டூர் காவல் நிலையத்தைல் விசாரணைகுக மாற்றம் செய்தார்கள். ஆனால் புகாரின் மீது எந்த நடவடிக்யையும் எடுக்கவில்லை. பின்னர் 30.10.2021 ம் தேதி தபால் மூலம் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்யையும் எடுக்க வில்லை. அதனால் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு போட்டோம். வழக்கு எண்.341/2022 , பின்னர் நீதிமன்றத்தில் நடந்த விவரங்களை விசாரித்து முதல் தகவல் அறிக்க பதிவு செய்யும் படி கொரட்டூர் காவல் நிலைய அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனாலும் எந்த வித விசாரனையும் முறையாக நடைப்பெற வில்லை. எனவே CBCID க்கு இந்த வழக்கினை மாற்ற பரிந்துறைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் 3 வருடங்களாக குற்ற பத்திக்கை தாக்கல் செய்யாமல் உள்ளது.

எனவே, இந்த வழக்கின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur